பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 13 வியாழக்கிழமை 25.02.2021 கதிர் 343

## இளம் குடும்பஸ்தர் வவுனியாவில் சாவு



வவுனியா கூமாங்குளம் பகுதியில் இளம் குடும்பஸ்தரின் சடலம் ஒன்று இன்று மீட்கப் பட்டுள்ளது.

இந்நபர் நேற்றையதினம் வீட்டில் இருந்துள்ளார். இந்நிலையில் இன்று காலை ☞2

## தேசிய நிகழ்வாக வெசாக் இம்முறை நயினாதீவில்!

### அலரி மாளிகையில் இன்று ஏற்பாட்டுக் கூட்டம்



(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம் ,பெப்ரவரி 25

இந்த ஆண்டு வெசாக் பண்டிகையை தேசிய நிகழ்வாக நயினாதீவில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனை முன்னெடுப்பதற்கான விசேட கூட்டம் இன்று மாலை அலரி மாலிகையில் இடம்பெறுகின்றது.

வெசாக்பண்டிகையை சர்வதேசபண்டிகையாக அறிவிக்கும் நிலையில் இலங்கையில் இந்த ஆண்டு வெசாக்கை தேசிய ரீதியில் ஓர் இடத்தை முதன்மைப்படுத்தி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. ☞2

# தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஜெனிவாவில் இந்தியா வலியுறுத்து

### இராஜதந்திர சொல்லாடலில் கருத்துரை

**ஜெனிவா, பெப்ரெவரி, 25**

**ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46ஆவது அமர்வில்இன்றுபிற்பகல்இலங்கை தொடர்பாக விவாதத்தில் உரையாற்றிய இந்தியாவின் ஜெனிவா பிரதிநிதி, இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளை அங்கு வலியுறுத்தியிருக்கின்றார்.**

**இலங்கையுடன் இந்தியாவின் ஊடாட்டம் இரண்டு தூண்களில் தங்கியுள்ளது என்றார் அவர்.** ☞2



## மனித உரிமை மீறல்கள் தொடரும் பேராபாய நிலைமை இலங்கையில்!

### ஜெனிவாவில் ஆணையர் பச்லெட் உரை




இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து 12 ஆண்டுகள் கடந்த பிறகும் அங்கு பல இடங்களில் அப்பட்டமாக மனித உரிமைகள் மீறப்படுகின்றன என ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத் தில் குற்றம்சாட்டப்பட்டுள் ளது.

இது தொடர்பாக ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46ஆவது அமர்வில் நேற்று ☞2

## இலங்கை பற்றிய விவாதம் ஆரம்பமானது தொடக்கத்திலேயே பிரேரணைக்கு ஆதரவு!

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேவையின் 46 ஆவது அமர்வில் இலங்கை விவகாரம் பற்றிய ஊடாட்ட உரையாடல் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் ஆரம்பமானது.

இலங்கைக்கு எதிராக முக்கிய நாடுகள் முன்வைத்துள்ள பிரேரணைக்கு ஆதரவான நிலைப்பாடே ஆரம்பத்தில் தென்பட்டது.

முதலில் உரையாற்றிய பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், நோர்டிக் நாடுகளின் சார்பில் நோர்வே, கனடா, ஜேர்மன் போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் பிரேரணைக்கு வலுவூட்டி உரையாற்றினர்.

ரஷ்யா, பிலிப்பைன்ஸ் பிரதிநிதிகள் இலங்கை அரசு சார்பான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

இந்தியப் பிரதிநிதியின் உரை இரண்டு தரப்புக்கும் இடைப்பட்டதாக வெளியே தோற்றினாலும், ☞2

## பட்டப்பகலில் வயோதிப மாதிடம் கொள்ளையிட்ட இருவர் சிக்கினர்

ஊர்காவற்றுறை சரவணையில் பட்டப்பகலில் வயோதிப் பெண்ணைத் தாக்கி தங்க நகையை கொள்ளையிட்ட சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மற்றும் மானிப்பாயைச் சேர்ந்த இருவரே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். ☞2

## ஹொரணவுக்குப் போகிறது வெலிகடைச் சிறைச்சாலை!

வெலிகடைச் சிறைச்சாலையை ஹொரண பகுதியிக்கு இடம்மாற்றி அதி பாதுகாப்பு சிறைச்சாலையாக பிரகடனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்துள்ளார்.

பூஸா சிறைச்சாலைக்கு வருகை தந்திருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் உள்ள நெரிசலை ☞2

## நிதியை முறைகேடாக பயன்படுத்திய வழக்கில் மஹிந்தானந்த விடுதலை!



இலங்கை சுதந்திர தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்தின் தலைவராக செயற்பட்ட காலத்தில் அந்தத் தொழிற்சங்கத்திற்கு சொந்தமான 39 லட்சம் ரூபா பணத்தை முறைகேடாக பயன்படுத்தினார் ☞2

## 5 லட்சம் தடுப்பூசிகள் இன்று இந்தியாவில் இருந்து வந்தன

இலங்கையினால் கொள்வனவு செய்யப்பட்ட 5 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் இன்று பகல் இந்தியாவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனப் பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.




## வத்திராயன் கடற்கரையை அண்டி ஏவப்பட்ட பரா வெளிச்சக் குண்டு!

### கடத்தல்காரர்களின் சமிக்ஞையா?

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்.பெப்.26

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்கரையை அண்டிய பரட்டைக் காடு உள்ள பிரதேசத்தில் நேற்று இரவு 8 மணியளவில் திடீரென ☞2



# மனித உரிமை ஆணையரின் பரிந்துரைகளை திட்டவட்டமாக நிராகரித்தது இலங்கை அரசு!

### வெளிவிவகார அமைச்சர் தினேஷ் தமது உரையில் தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் முன்வைக்கப்பட்ட - இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் உள்ள முடிவுகளையும் பரிந்துரைகளையும் இலங்கை திட்டவட்டமாக நிராகரிப்பதாக வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று மெய்நிகர் முறையில் ஆற்றிய உரையில் கூறப்பட்டவை வருமாறு:-

கடந்த ஆண்டு இந்த சபையின் 43 ஆவது அமர்வில் இலங்கை அரசாங்கம் இணை அனுசரணையிலிருந்து விலகுவதாக அறிவித்த தீர்மானம் 30/1 மற்றும் 40/1 ஆகியவற்றிலிருந்து வெளிவருகின்றது.

சுயமரியாதை, இறையாண்மை கொண்ட எந்தவொரு நாட்டிற்கும், முக்கியமாக ஆட்சி தொடர்பான ☞2

## மனித உரிமை ஆணையரின் பரிந்துரைகளை ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலபிரச்சினைகள்மற்றும்உள்நாட்டு விடயங்களை உள்ளடக்கி, நியாயமற்ற முறையில் தனது நோக்கத்தை விரிவுபடுத்திமேலும்ஆணையிட்டுள்ளஆணையாளரின் அறிக்கையை இலங்கை நிராகரிக்கின்றது. இது ஐ.நா. சாசனத்தின் 2 (7) ஆவது பிரிவான தற்போதைய சாசனத்தில் உள்ள எதுவும் ஐக்கிய நாடுகள் சபைக்கு எந்தவொரு அரசினதும் உள்நாட்டு அதிகார எல்லைக்கு உட்பட்ட விடயங்களில் தலையீடு செய்வதற்கு அங்கீகாரம் அளிக்காது - என்ற விதியை முழுமையாக மீறும் செயலாகும்.

பரிந்துரைகள் மற்றும் முடிவுகள் தொடர்பாக வெளிவந்த பாதையானது, இலங்கைக்கு எதிராக இடைவிடாமல் தொடர்ந்த முன்கூட்டிய, அரசியல்மயப்படுத்தப்பட்ட மற்றும் பாரபட்சமற்ற சில கூறுகளின் நிகழ்ச்சி நிரலைப் பிரதிபலிக்கின்றது. இந்தப் பரிந்துரைகள் தவறான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அமைந்தவை.

ஆணையாளரின் அறிக்கையில் உள்ள முடிவுகளையும் பரிந்துரைகளையும் இலங்கை திட்டவட்டமாக நிராகரிக்கின்றது.

முப்பது ஆண்டுகளாக வெளியிடப்படாத மற்றும் அவற்றுள் சில ஆணையாளரின் அலுவலகத்தினால் தக்கவைக்கப்பட்டு, அணுகுவதற்கு மறுக்கப்பட்டிருந்த ஆதாரங்களின் அடிப்படையில், குறிப்பாக ஐ.நா. மற்றும் அதன் பொறிமுறைகளுடன் தொடர்ச்சியாகவும் ஆக்கபூர்வமாகவும் ஈடுபட்டு வரும் இலங்கை போன்ற ஒரு நாடு தொடர்பாக, சொத்து முடக்கம், பயணத் தடைகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைப் பற்றிய குறிப்புக்கள் மற்றும் தனிப்பட்ட அரசுகள் உலகளாவிய அதிகார வரம்பைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கான அழைப்பானது, சர்வதேச சமூகம் ஒட்டுமொத்தமாகக் கவனிக்க வேண்டிய ஒரு தனித்துவமான மற்றும் சிறந்த ஆபத்தை சுட்டிக்காட்டுகின்றது. சில நாடுகளின் இத்தகைய ஒருதலைப்பட்ச நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவையும் மற்றும் இயற்கை நீதியின் கொள்கைகளை மீறுவதுமாகும்.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்திற்கும் மேலதிகமாக, அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தவறான தகவல்கள், தவறான கருத்துக்கள் மற்றும் தன்னிச்சையான மதிப்பீடுகள் குறித்து இலங்கை எழுத்து பூர்வ கருத்துக்களை வழங்கியுள்ளது. ஆணையாளரின் அலுவலகம் தனது அறிக்கையை முன்னெப்போதும் இல்லாத பிரச்சாரத்துடன் இணைந்து வெளியிட்டமை மற்றும் குறித்த அறிக்கை தொடர்பான எமது கருத்துக்களை ஒரு துணை நிரலாக வெளியிட மறுத்தமை ஆகியன வருத்தமளிக்கின்றன. இது இலங்கையையும், அறிக்கை குறித்த இலங்கையின் கருத்துக்களை சமமாகக் காணும் உறுப்பினர்களையும் இழிந்துள்ளது.

இந்தசபைக்குமுன்னர்விளக்கப்பட்ட காரணங்களுக்காக இலங்கையால் நிராகரிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் தொடர்பான நிபுணர் குழுவின் மிகவும் சர்ச்சைக்குரிய அறிக்கை மற்றும் இலங்கை தொடர்பான உயர் ஸ்தானிகர் அலுவலக விசாரணை அறிக்கை ஆகியவற்றிலிருந்தான உயர் ஸ்தானிகரின் அறிக்கையில் மீளுருவாக்கம் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களை இலங்கை மறுக்கின்றது. கூறப்பட்ட சர்ச்சைக்குரிய அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கையின் உள்ளடக்கங்கள், நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் எமது மக்களின்வாழ்க்கைஉரிமைஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நியாயமான நடவடிக்கைளுடன், சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட ஒரு பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திய அட்டூழியங்களை சமன் செய்வதாகத் தோன்றும் உண்மைத் தவறுகளால் நிறைந்திருக்கின்றன.

தலைவி அவர்களே, இந்த சபை மற்றும் அனைத்து ஐ.நா. அமைப்புக்களுடனான எமது தொடர்ச்சியான ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாடுகள் இருந்தபோதிலும், வெளிப்புறமாக இயக்கப்படும் சக்திகளை தொடர்ந்தும் வலியுறுத்துவதானது பல சவால்களை ஏற்படுத்துவதாக அமைவதுடன், இதுபோன்ற செயன் முறைகள் ஐ.நா.வின் அனைத்து உறுப்பு நாடுகளையும் பாதிக்கும் ஆபத்தான முன்னுதாரணத்தையும் அமைக்கும்.

அரசியல் உந்துதல்களால் உந்தப்பட்டு, இந்த சபையால் இலங்கை மீது செலுத்தப்பட்டுள்ள கவனத்திற்காக நாங்கள் வருந்துகின்றோம். இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு தீர்மானமும் சபையால் நிராகரிக்கப்பட்டு மூடப்பட வேண்டும் என இலங்கைஇந்தசபைஉறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.

முடிவில், இந்த சபை உட்பட ஐ.நா. மற்றும்சர்வதேசசமூகத்துடன்பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட பகுதிகளில், அரசமைப்பிற்கு இணங்க, உள்நாட்டு முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்ப ஆக்கபூர்வமாக ஈடுபடுவதற்காக நாங்கள் தயாராக இருக்கின்றோம். - என்று உள்ளது.

## வத்திராயன் கடற்கரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பராவெளிச்சக்குண்டுஏவிவிடப்பட்டமையினால் சிறிது நேரம் அப் பகுதியில் பதற்றம் நிலவியது.

பரா வெளிச்சக்கூடு ஏவி விடப்பட்டு கடத்தல் படகுகளிற்கு வழி காட்டப்பட்டதா என்ற கோணத்தில் உடனடியாக தீவிர தேடுதல் இடம்பெற்றுள்ளது.

இதேநேரம்போர்க்காலத்தில்கைவிடப்பட்ட பரா வெளிச்சக்குண்டாக இது இருக்குமா என்ற கோணத்தில் ஆராயப்பட்டபோதும் ஏவப்பட்ட குண்டின் எஞ்சிய பகுதிகள் அது புதிதாக இருப்பதை அடையாளப்படுத்துவதால் சந்தேகம் கொண்டு தேடுதல் இடம்பெற்றது.

இருந்தபோதும் பரா வெளிச்சக் குண்டை ஏவியவர்கள் தொடர்பிலோ அல்லது சந்தேகத்தின் பெயரிலோ எவரும் கைது செய்யப்படவில்லை. தீவிர விசாரணைகள் இடம்பெறுகின்றன.

## நிதியை முறைகேடாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என சட்டமா அதிபர் தாக்கல் செய்த குற்றச்சாட்டுக்களில் இருந்து அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவை கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

4 வருடங்களாக இடம்பெற்ற இந்த வழக்கில் இருந்து நீண்ட விசாரணைகளின் பின்னர் அமைச்சரை விடுதலை செய்வதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்யா பட்டபெதிகே உத்தரவிட்டுள்ளார்.

பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குக்கு தொடர்பில் சரியான ஆதாரங்கள் சமர்பிக்காத காரணத்தினால் அவரை விடுதலை செய்வதாக நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## ஹொரணவுக்குப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்துவதற்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## பட்டப்பகலில் வயோதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையிட்ட நகை நிதி நிறுவனம் ஒன்றில் அடகு வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டமையுடன், தொலைபேசி ஒன்றும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் கூறினர்.

## மனித உரிமை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதன்கிழமை காணொலி வாயிலாக தனது அறிக்கை முடிவு குறித்தும் தீர்மான குறிப்பு பற்றியும் விளக்கினார் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் மீஷெல் பச்லெட் அம்மையார்.

எனது அறிக்கை குறிப்பிடுவது போல, உள்நாட்டு யுத்தம் முடிந்து சுமார் 12 ஆண்டுகள் கடந்த பிறகும் கூட பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது உறுதிப்படுத்தப்படவில்லை. கடந்த காலங்களில் நிலவிய அதே அடக்குமுறை, துன்புறுத்தல் போன்றவை தொடர்ந்திருக்கின்றன என்று மீஷெல் பச்லெட் கூறினார்.

2015ஆம் ஆண்டில், மனித உரிமை மீறல் நடக்காதவாறு பார்த்துக் கொள்வதாக உறுதிமொழி அளித்த பிறகும், தற்போதைய அரசு, அதன் முந்தைய ஆட்சியாளர்களைப் போலவே, உண்மையை கண்டறியவும் குற்றங்களுக்கு பொறுப்புடைமையாக்கும் நடவடிக்கையிலும் தோல்வி அடைந்துள்ளது.

### உயிர் பிழைத்தவர்களின் வாழ்க்கை நிர்மூலம்

போரில் உயிர் பிழைத்த ஆயிரக்கணக்கானோரின் வாழ்வு நிர்மூலமாகியிருக்கிறது. அதுமட்டுமன்றி அமைப்பு முறை, கட்டமைப்பு, கொள்கைகள், பணியாளர்கள் போன்றவற்றில் முந்தைய காலம் போலவே விதிமீறல்கள் தொடருகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் முக்கியமான பணி, குறைகளுக்கு தீர்வு கண்டு முந்தைய விதிமீறல்கள் நடக்காதவாறு கவனிப்பதுதான்.

கடந்த ஆண்டு, முக்கிய பகுதிகளில் மிகக் கடுமையான வகையில் சங்கடத்தை தரக்கூடிய போக்கு தீவிரமாக இருப்பதை எமது அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

முந்தைய ஆண்டுகளில் வளர்ந்து வந்த சிவில் சமூகமும் தன்னிச்சையான ஊடகமும் தற்போது வேகமாக சுருங்கி வருகின்றன. நீதித்துறை சுதந்திரம், இலங்கை மனித உரிமைகள் ஆணையம், தேசிய பொலிஸ் ஆணையம் ஆகியவை சமீபத்தில் கொண்டுவரப்பட்ட 20ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் பலவீனமாக்கப்பட்டுள்ளன.

முக்கியமான சிவில் நிர்வாக பணிகளில் வளர்ந்து வரும் இராணுவத் தலையீடு, ஜனநாயக ஆளுகை மீதான ஆக்கிரமிப்பாக பார்க்கப்படுகிறது. பிரத்தியேக சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதில் காணப்படும் தொடர்ச்சியான தோல்வி அல்லது விதிமீறல்களுக்குக் காரணமானவர்களை அடையாளம் காணாமல் இருப்பது, கொடூரமான குற்றங்கள் மற்றும் விதிமீறலில் குற்றம்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளைப் பொறுப்புடைமைக்கு ஆளாக்காமல் விட்டுள்ளமை போன்றவை அரசின் அலட்சியத்தைக் காட்டுகின்றன.

தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர், அரசின் உயர் பொறுப்புகள் உள்ளிட்ட பணிகளில் சேராத வகையில், பிளவுபடுத்தக்கூடிய மற்றும் தவறான சொல்லாடல்களால் தவிர்க்கப்படுகிறார்கள்.

### சிறுபான்மை சமூகங்கள் கவலை

கொவிட்- 19 சடலங்கள் கட்டாயப்படுத்தப்பட்டு தகனம் செய்யப்படுவது முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சிறுபான்மை சமூகங்களுக்கு வலியையும் சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால், நீண்ட கால அடிப்படையிலான அமைப்பு சார்ந்த பிரச்சினைகள் இலங்கையில் தொடருகின்றன.

கடந்த கால வன்முறைகள், இப்போதும் தொடரலாம் என்ற அபாய செய்தியின் அறிகுறி தெளிவாக தென்படுகிறது. அடுத்து வந்த அரசுகள், உண்மையையும் பொறுப்புடைமையையும் உறுதிப்படுத்துவதில் தோல்வி அடைந்து விட்டன. உண்மையில், மனித உரிமைகள் வழக்குகளில் அரசாங்கம் நீதி நடைமுறைகளுக்கு தடங்கலை ஏற்படுத்தியிருக்கிறது.

முந்தைய ஆணையங்களின் கண்டுபிடிப்புகளை மறுஆய்வு செய்வதற்காக கடந்த ஜனவரியில் அமைக்கப்பட்ட ஆணையம், அர்த்தமற்ற முடிவின்றி அதே பாணியை தொடர்ந்திருக்கிறது. ஆணையம் முன்பு வழங்கிய பரிந்துரையை அமுல்படுத்தாதவண்ணம், உண்மையான முன்னேற்றத்தை தேசிய நடைமுறைகள் மூலம் செயல்படுத்தும் வாய்ப்பை அரசு மூடி விட்டது.

இதுபோன்ற காரணங்களால், புதிய வகையிலான பொறுப்புணர்வை உள்ளடக்கிய தீர்வை ஆராயவும் எதிர்காலத்தில் உறுப்பு நாடுகளில் நிலவும் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களை உறுதிப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வழிமுறைகளை கையாளவும் வலியுறுத்துகிறேன். - என்று மீஷெல் பச்லெட் தெரிவித்தார்.

## தேசிய நிகழ்வாக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வகையில் இந்த ஆண்டிற்கான தேசிய வெசாக் பண்டிகையை யாழ்ப்பாணம் மாவட்டம் நயினாதீவில் மேற்கொள்ள புத்த சாசன அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதற்கான ஆயத்தக் கூட்டம் இன்று மாலை 5.30 மணிக்கு அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறுகின்றது.

இன்று இடம்பெறும் விசேட ஏற்பாட்டுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு மாவட்டச் செயலாளருக்கு நேற்று மாலை தொலை நகல் மூலம் அறிவிக்கப்பட்டதற்கு இணங்க மாவட்டச் செயலாளர் அவசரமாக கொழும்பு பயணித்துள்ளார்.

## தமிழ் மக்களின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று - இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடும் இறைமையும்.

அடுத்து - சமத்துவம், கௌரவம், நீதி, மதிப்புடன் வாழ்வது தொடர்பில் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்வது.

இந்த இரண்டுமே ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. ஒன்றில்லாமல் மற்றையது இல்லை என்பதுதான் நிலைமை.

அதனால்தான் அரசமைப்பின் 13 ஆவதுமுழுமையாக நடைமுறைப்படுத்துவது உட்பட தமிழர்களின் அபிலாஷைகள் முழுமையாக நிறைவு செய்யப்படுவது முக்கியமாக அமைகின்றது.

- இதுவே சுமார் ஒன்றரை நிமிடம் இந்தியப் பிரதிநிதி ஆற்றிய உரையின் சாராமாக அமைந்தது என ஜெனிவா வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ)

## இளம் குடும்பஸ்தர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது வீட்டின் முற்றத்தில் சடலமாக இருப்பதனை அவதானித்த அவரது மனைவி அதிர்ச்சியடைந்தார். சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவத்தில் கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த கந்தையா மார்லின்ரயன் என்ற 31வயதான ஒரு பிள்ளையின் தந்தையே சாவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இலங்கை பற்றிய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தரப்புக்கு கடும் எச்சரிக்கையை மிதமான இராஜதந்திர வார்த்தைகளினால் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

இந்த இதழ் இன்று மாலை பிரசுரத்துக்கு போக இருந்த சமயத்தில் கிடைத்த கடைசிக்கட்ட செய்திகளின்படி பெலராஸ், மாலைதீவு, வியட்நாம், சிரியா, கம்போடியா, நேபாளம், எகிப்து, கமரூன், சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பிரேரணையை எதிர்த்து உரையாற்றினர்.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்சிலில் பார்வையாளர் அந்தஸ்தில் உள்ள அமெரிக்காவின் பிரதிநிதி இந்தப் பிரேரணையை ஆதரித்து உரையாற்றினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேரினவாத 'பூமராங்' இது!

வினை விதைத்தவர்கள் அதை அறுத்தேயாக வேண்டும். அதுவே இயற்கை நியதி. மாற்ற முடியாத தத்துவம் அது.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் இந்த நியதியை ஒட்டி ஒரு விவகாரத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

பேரினவாத பூமராங் வளையம் அதை எறிந்த பேரினவாதிகளை நோக்கியே திரும்பி வருகின்றது என்று அவர் காட்டியிருக்கின்றார்.

அவர், குறிப்பிடுகின்றமை போல, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலை நடத்திய சஹ்ரானும் குழுவினரும் முஸ்லிம்களாக இருக்கலாம், ஆனால் அவர்கள் இந்த நாட்டு முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்களே அல்லர்.

ஆனால், சஹ்ரான் குழுவினரின் இன, மத அடையாளத்தைப் பயன்படுத்தி, இந்தத் தாக்குதலைக் காட்டி, முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகப் பேரினவாத வெறியைத் தூண்டி விட்டனர் பௌத்த, சிங்கள இன வெறியர்கள்.

அந்தப் பேரினவாதக் கிளர்ச்சி மூலம்தான் நல்லாட்சி அரசைத் தோற்கடித்து, ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியதிகாரத்துக்கு ஏறினார்கள் என்பது வெளிப்படையான உண்மை.

மனோ கணேசன் கூறியமை போல, ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு சஹ்ரான் குழுவினரின் பயங்கரவாதக் கொடூர நடவடிக்கை உதவியது.

நாம் ஏற்கனவே ஒரு விடயத்தை இப்பத்தியில் சுட்டிக் காட்டியிருந்தோம். அதற்கு அடுத்த கட்டத்தை மனோ கணேசன் எம்.பி. இப்போது தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய ஆணைக்குழு விசாரணையைத் துரிதப்படுத்தினால் முஸ்லிம் தலைவர்கள் பலர் சிக்குவர் என கர்தினால் உட்பட சில மதவாதிகள் கனவு கண்டனர். ஆனால் அப்படி நடக்கவில்லை. சிக்கியவர்கள் – குற்றம் சுமத்தப்பட வேண்டியவர்கள் என ஆணைக்குழு அடையாளம் கண்டவர்கள் – எல்லோருமே பௌத்த, சிங்களப் பிரமுகர்களே என்று நாம் சுட்டிக் காட்டியிருந்தோம்.

இந்த ஈஸ்டர் ஞாயிறுத் தொடர் குண்டுத் தாக்குதல் என்ற கொடூரத்தைப் புரிந்த சஹ்ரான் கும்பல் முஸ்லிம்களாக இருக்கலாம். ஆனால் இலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் அல்லர் அவர்கள். இது, வெளிப்படையாகத் தெரிந்திருந்தும் கூட சில மதத் தலைவர்களும், தமது சுயநல அரசியலுக்காக இனவாதத்தைக் கிளப்பும் பல அரசியல்வாதிகளும், அந்தத் தொடர்த் தாக்குதலை முஸ்லிம் சமூகத்தின் தாக்குதலாக இலங்கை மக்களுக்குக் காட்ட முயன்றனர்.

அந்தத் தவறான வழிநடத்தல் மூலம் தமது அரசியல் இலக்குகளை அடையும் நயவஞ்சகத்தனத்திலும் அவர்கள் லாப மீட்டினர் என்பதும் உண்மைதான்.

ஆயினும், காலம் தாழ்த்தியேனும் இப்போது உண்மைகள் அம்பலமாகத் தொடங்கியிருக்கின்றன.

இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியோர் பட்டியலை, இது தொடர்பாக விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது பரிந்துரையில் தந்துள்ளது. அதில் முதலாம் இடம் மைத்திரிபால சிறிசேனாவுக்கு.

அவர் முன்னாள் ஜனாதிபதி மட்டுமல்லர். இப்போதைய ஆளுங் கூட்டணியின் தவிசாளர். மொட்டுக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பில் முதல் வரிசையில் அமர்ந்துள்ள முதல் எம்.பியும் கூட என்று சுட்டுகின்றார் மனோ கணேசன்.

இந்தத் தொடர் குண்டு வெடிப்புத் தாக்குதல் நடைபெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் நல்லாட்சி அரசை தடாலடியாகக் 'கலைத்து', மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்து, ஒரு சிறுபான்மை அரசை அதிகாரத்துக் கொண்டு வர 2018 இல் இதே மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்து முயற்சித்தார் என்பதையும் மனோ கணேசன் நினைவூட்டுகின்றார்.

'பேரினவாத பூமராங்' அதை எறிந்த பேரினவாத மொட்டுக் காரர்களை நோக்கி இப்போது திரும்பி வருகின்றது. 'வினை விதைத்தோர் வினை அறுக்கும் படலம்' இப்போது ஆரம்பமாகியிருக்கின்றது என்பதை விளக்குகின்றார் அவர்.

அது முற்றிலும் உண்மை.

யாரோ ஒரு கும்பல் – முஸ்லிம்கள் அணி – செய்த பயங்கரவாதச் செயலை, முழு முஸ்லிம்களுக்கும் எதிராகவும், சிறுபான்மையினருக்கு எதிராகவும், இனவாதமாகக் கிளப்பி, பேரினவாத வெறியைத் தூண்டி, அரசியல், அதிகார லாபமீட்டியது ஒரு குள்ளநரிக் கும்பல்.

இப்போது உண்மை அம்பலமாகி வருகின்றது. பேரினவாத வெறியர்களின் முகத்திரை கிழிந்து யதார்த்தம் வெளிப்படுகின்றது.

இந்த நாசகாரச் செயலில் உயிரிழந்த அப்பாவிகளின் உயிர்களை அரசியல் சுய லாபத்துக்குப் பயன்படுத்தியோர், அந்த வினைக்காக அறுவடை செய்ய வேண்டிய காலம் கனிந்திருக்கின்றது.

# வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களை இலவசமாக நாட்டிற்குள் அழைத்துவராதமை ஏன்?

## சஜித் பிரேமதாஸ கேள்வி



வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களை இலவசமாக நாட்டுக்குள் வரவழைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதமை ஏன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி எழுப்பினார். எனினும் நாடாளுமன்ற விதிமுறைகளை மீறி எதிர்க்கட்சித் தலைவர் செயற்படுகிறார் என்று ஆளும் தரப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை, சபை ஒத்திவைக்கப்படும் வேளையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஒழுங்குப்பிரச்சினை எழுப்பி வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள் தொடர்பாகக் கேள்வி எழுப்பினார்.

அவர் இதன்போது கூறுகையில் –

நாற்பதாயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் அநாதரவாகியுள்ளனர். அவர்களை நாட்டுக்கு மீண்டும் வரவழைப்பதில் அதிகளவில் பணம் அறவிடப்படுகின்றது. விமானச்சீட்டுக்கும், தனிமைப்படுத்துவதாகக் கூறி ஹோட்டல்களுக்கும், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும், பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குமென அவர்களிடமிருந்தே பணம் அறவிடப்படுகின்றது.

இப்போதுவரையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் திணைக்களத்தில் 1,400 கோடி ரூபா சேமிப்பில் உள்ளது. இந்தப் பணத்தைச் செலவு செய்து எமது மக்களை இலவசமாக நாட்டுக்கு அழைத்துவர ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதுள்ளது. வெளிநாடுகளில் பணிபுரியும் எமது மக்கள் சேமித்து வைத்துள்ள பணத்தைச் செலவு செய்து நாட்டுக்கு வர வேண்டியுள்ளது.– என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஆளும் கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ –

எதிர்க்கட்சித் தலைவர் எந்தவித நிகழ்ச்சி நிரலிலும் உள்ளடங்காத ஒரு விடயம் தொடர்பாக சபையில் பேசிக் கொண்டுள்ளார். சபை ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சபை விதிமுறைகளை மீறி செயற்பட்டு வருகின்றார் என எதிர்க்கட்சி தலைவருடன் வாக்குவாதப்பட்டார். இதனால் எதிர்க்கட்சிதலைவருக்கும் – அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை அடுத்து சபை ஒத்திவைக்கப்பட்டது.

# யாழில் 489 குடும்பங்களை சேர்ந்த 950 பேர் சுயதனிமைப்படுத்தலில்!

யாழ் மாவட்டத்தில் 489 குடும்பங்களை சேர்ந்த 950 பேர் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர் என மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேஷன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கொரோனா நிலைமைகள் தொடர்பாக நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்குப் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார். அது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்.மாவட்டம் அபாய நிலைக்கு செல்லாமல் இருப்பதற்கு வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்.மாவட்டத்திற்கு வருவோர் தயவு செய்து தாங்களாகவே சுயதனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் இதன் மூலமே கொரோனாவைக் கட்டுப்படுத்தலாம்.

யாழ்.மாவட்டத்தில் கொரோனா அபாய நிலை ஏற்படவில்லை. ஆனாலும் மாவட்டத்தில் தொற்றுக்குள்ளாவோர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. எனவே, வெளிமாவட்டங்களில் இருந்துவருவோர் தமது பாதுகாப்பையும், தாம் சார்ந்த சமூகத்தினது பாதுகாப்பையும் கருதி சுயதனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும்.

தற்போது யாழ் மாவட்டத்தில் 489 குடும்பங்களைச் சேர்ந்த 950 பேர் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர். மேலும் கொவிட் – 19 தடுப்பூசி சில வாரங்களில் கிடைக்கப்பெறும் என நம்புவதுடன் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு முதற்கட்டமாக தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

எனவே மாவட்டத்திலுள்ள மக்களும், வெளிமாவட்டங்களில் இருந்து வரும் மக்களும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை மிக இறுக்கமாகப் பின்பற்றி சுகாதார பிரிவுக்கும், சமூகத்துக்கும் ஒத்துழைக்கவேண்டும். – என்றார்.

# ரயில் மோதி இளைஞர் சாவு!

## மட்டக்களப்பில் சம்பவம்



கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த ரயிலில் இளைஞர் ஒருவர் மோதி உயிரிழந்த சம்பவமொன்று நேற்று புதன்கிழமை அதிகாலை மட்டக்களப்பு கருவப்பங்கேணி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு புன்னைச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய விக்கினேஸ்வரராஜா சதுாசன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கருவப்பங்கேணி பிரதேசத்தில் உறவினர் ஒருவரின் மரணவீட்டுக்குச் சென்றுள்ள நிலையில் அதிகாலை 4 மணியளவில் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு சென்ற ரயிலுடன் கருவப்பங்கேணி பிரதேசத்தில்வைத்து, மோதியதில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டுசிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் மேலும் 32 கொரோனா நோயாளர்கள்!

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் சுகாதாரப் பிரிவின் கீழ் கடந்த புதன்கிழமை மாத்திரம் 32 கொரோனாத் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நலின் அரியரத்ன தெரிவித்தார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள 03 தொழிற்சாலைகளில் பணிபுரியும் 20 பேர் இவ்வாறு அடையாளம் காணப்பட்ட நோயாளர்களுள் அடங்குவர்.

அவர்களுள் 14 பேர் கட்டுநாயக்க பிராண்டிக்ஸ் தொழிற்சாலையின் ஊழியர்கள் ஆவர்.

இதேவேளை ஏனைய 12 கொரோனா நோயாளர்கள் சீதுவ சுகாதாரப் பிரிவின் கீழ் பதிவாகியுள்ளனர். குறித்த பிரிவுகளில் இதுவரை 908 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று புதன்கிழமை அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக கேகாலையில் உள்ள பின்னவல ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

# மக்களை காங்கிரஸ் அரசு ஏமாற்றிவிட்டது புதுச்சேரியில் பிரதமர் மோடி கடும் தாக்கு



புதுச்சேரியில் இருந்த காங்கிரஸ் அரசு மீனவர் திட்டங்களைச் சரியாகச் செயற்படுத்தவில்லை என்றும், கூட்டுறவுத் துறையைச் சரியாகக் கையாளவில்லை என்றும் பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுச்சேரி லாஸ்பேட்டையில் பா.ஜ.க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசினார். அப்போது, புதுச்சேரியில் 5 ஆண்டுகளாக மக்கள்மகிழ்ச்சியாக இல்லை என்றும், நாராயணசாமி தலைமையிலான ஆட்சி கவிழ்ந்ததால் இப்போது மக்கள் மகிழ்ச்சியாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

புதுச்சேரியில் காங்கிரஸ் அரசில் நிர்வாகச் சீர்கேடு நிறைந்ததாக இருந்ததாகவும், கடல்சார் திட்டங்கள், மீனவ திட்டங்களைச் செயற்படுத்தவில்லை என்றும் குறைகூறினார். சில நாள்களுக்கு முன் புதுச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் ஒரு பெண் அரசைக் குறை கூறிய போது, அதை மறைத்த நாராயணசாமி அவரது கட்சித் தலைவரிடம் பொய் பேசியதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீர், லடாக்கில் கூட உள்ளாட்சித் தேர்தல் நடத்தபோது புதுச்சேரியில் உள்ளாட்சித் தேர்தலை காங்கிரஸ் அரசு நடத்தவில்லை எனத் தெரிவித்தார்.

மீன்வளத்துறைக்குத் தனி அமைச்சகம் அமைக்கவில்லை எனக் காங்கிரஸ் கட்சியினர் பொய் சொல்வதாகவும், 2019ஆம் ஆண்டிலேயே மீனவ மக்களுக்கு அமைச்சகம் அமைத்துள்ளதாகவும் தெரிவித்தார். காங்கிரஸ் கட்சி நாடு முழுவதும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும், காங்கிரஸின் வாரிசு அரசியல் முறைக்கு முடிவு கட்டப்பட்டு முற்போக்குச் சிந்தனை கொண்டதாக இந்தியா உருவாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொழில் வணிகம், கல்வி, ஆன்மீகம், சுற்றுலா ஆகியவற்றில் சிறந்த மாநிலமாகப் புதுச்சேரியை உருவாக்க பா.ஜ.க. விரும்புவதாகக் குறிப்பிட்டார். முந்தைய காங்கிரஸ் அரசு கூட்டுறவுத் துறையைச் சரியாகக் கையாளவில்லை எனக் குறைகூறிய பிரதமர், கூட்டுறவுத் துறைக்குப் புத்துயிரூட்ட பா.ஜ.க. விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மானியம் இல்லாத சிலிண்டர் விலை 3 ஆவது தடவை உயர்வு



இந்த மாதம் மானியம் இல்லாத சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 3 ஆவது முறையாக உயர்த்தப்பட்டுள்ளது.

14.2 கிலோ எடையுள்ள சிலிண்டரின் விலை 769 இந்திய ரூபாயில் இருந்து 794 இந்திய ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன. கடந்த டிசெம்பரில் சிலிண்டர் விலை இரண்டு முறை உயர்த்தப்பட்டது.

அந்த மாதம் மட்டும் 100 ரூபா அதிகரிக்கப்பட்டது. ஆனால் கடந்த மாதம் விலை உயர்த்தப்படவில்லை. சென்ற மாதம் மானியம் இல்லாத சிலிண்டரின் விலை 694 ரூபாயாக இருந்தது. இந்த நிலையில் இப்போது விலை உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐஸ்கிறீமில் விஷம் கலந்து தற்கொலைக்கு முயற்சி பறிபோன இரு உயிர்களால் பரிதவிக்கும் உறவினர்

கேரள மாநிலத்தில் தாய் தற்கொலைக்காக வைத்திருந்த விஷம் கலந்த ஐஸ் கிறீமை தவறுதலாக உண்ட 5 வயது மகன் பலியானதைத் தொடர்ந்து, தாயின் சகோதரியும் பலியானதால் அம்மாநிலத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கேரள மாநிலம் காசர்கோடு பகுதியைச் சேர்ந்தவர் வர்ஷா . 25 வயதாகும் வர்ஷாவிற்கு திருமணமாகி 5 வயதில் ஒரு மகன் உள்ளான். இந்நிலையில் காசர்கோட்டில் உள்ள கன் ஹங்கட் பகுதியில் இருக்கும் தனது தாய் வீட்டுக்கு மகனை அழைத்துக் கொண்டு சென்றுள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி இரவு , தற்கொலை செய்து கொள்ளும் முயற்சியில், ஐஸ்கிறீம் ஒன்றை வாங்கி அதில் எலி மருந்தைக் கலந்துள்ளார். பின் அதனை உட்கொண்டதால் லேசான மயக்கம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தனது அறைக்குச் சென்று படுத்துவிட்டார் வர்ஷா. ஆனால் மீதமிருந்த எலி மருந்து கலந்த ஐஸ் கிறீமை அதே இடத்தில் வைத்திருந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, வர்ஷாவின் 5 வயது மகன் அட்வய்தும், 19 வயது தங்கை திரிஷ்யா, வர்ஷா மீதம் வைத்த ஐஸ்கிறீமை எடுத்து



சாப்பிட்டுள்ளனர். தொடர்ந்து, பிரியாணி சாப்பிட்டு விட்டு தூங்கியிருக்கின்றனர்.

திடீரென இரவு, வர்ாவின் மகன் அட்வய்த் வாந்தி எடுக்கத் தொடங்கியுள்ளான். இதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர், அருகிலுள்ள மருத்துவமனைக்குக் அட்வய்தை கொண்டு சென்றனர். ஆனால், அங்குச் சிகிச்சை பலனளிக்காமல் சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தான்.

அட்வய்த் இறந்தவுடன் திரிஷ்யாவிற்கும் உடல் நலம் வெகுவாக பாதிக்கப்பட்டது. இதனால் வர்ஷாவின் குடும்பத்தினர், திரிஷ்யாவை மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். ஒரு வாரகாலம் கடுமையான சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல், நேற்று அவர் உயிரிழந்தனர். விஷம் கலந்த ஐஸ் கிறீமை உண்ட பிறகும், தனக்கு எந்த பாதிப்பும் ஆகாததால், தன்னுடைய தற்கொலை முயற்சியைப் பற்றி குடும்பத்தினரிடத்தில் மறைத்துள்ளார் வர்ஷா. குடும்பத்தில் இருப்பவர்களும், அட் வய்த் மற்றும் திரிஷ்யா சாப்பிட்ட பிரியாணியில்தான் ஏதோ கோளாறு என்று நினைத்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக, வர்ஷாவின் உறவினர் சனோடு என்பவர் பொலிஸில் புகார் அளித்தார்.

விசாரணையில், வர்ஷா மீதம் வைத்த எலி மறந்து கலந்த ஐஸ்கிறீமை , அட்வய்தும் திரிஷ்யாவும் உண்டது தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து, காசர்கோடு பொலிஸார் வழக்குப் பதிவு செய்து , வர்ஷாவை கைது செய் துள்ளனர். மேலும் வர்ஷாவின் தற்கொலை முயற்சிக்கான காரணம் குறித்தும், பொலிஸார் தொடர் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். தாயின் அஜாக்கிரதையால் 5 வயது சிறுவன், மற்றும் 19 வயது பெண் உயிரிழந்த சம்பவத்தால், காசர்கோடு பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# மரண அறிவித்தல்



## திருமதி லீலாவதி விஸ்வலிங்கம்

யாழ். காரைநகர் நடுத்தெருவை பிறப்பிடமாகவும் லண்டன் Aylesburyஐ வதிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி விஸ்வலிங்கம் அவர்கள் 15.02.2021 (திங்கட்கிழமை) அன்று லண்டனில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமுத்து - கமலம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் (முன்னாள் உரிமையாளர் நியூ விஜயா ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, சுந்தரமூர்த்தி அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நடராசா மற்றும் தனநாயகி, காலஞ்சென்றவர்களான குணவதி, தனலட்சுமி, தனபாலன் ஆகியோரின் மைத்துனியும்,

சசிகலா (லண்டன்), விஜயேந்திரன் (லண்டன்), பரந்தாமன் (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும்,

ரவீந்திரன், பரமேஸ் (உஷா), செல்வராணி ஆகியோரின் மாமியாரும், சபோசினி, கிருஷ்நாத், சர்மிலன், யஸ்மிலன், ரம்யா, யாமினி, அஷ்வினி, ஹிரண்யா, ஹர்ணி, நிதேஷ் ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் 9 மணி வரை Divinity Funeral Care, 209 Kenton Road, Harrow, Middlesex, HA3 0HD என்ற முகவரியில் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் காலை 10 மணி முதல் 11 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று Golders Green Crematorium Hoop Lane, Golders Green, London, NW11 7NL என்ற முகவரியில் அமைந்துள்ள சேமக்காலையில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு:
சசிகலா ரவீந்திரன்(மகள் - லண்டன்): 44 075 517 57970
விஜயேந்திரன்(மகன் - லண்டன்): 44 075 787 63402
பரந்தாமன்(மகன் - கனடா): 011 647 938 3332

தகவல்: குடும்பத்தினர்

# பொலிவியாவில் வேட்டையாடுபவர்களால் அழிவின் விளிம்பில் ஆண்டியன் பறவைகள்



பொலிவியாவில் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்ட இரண்டு ஆண் டியன் கான்டோர் பறவைகள் சிகிச்சைக்கு பின் வனத்தில் விடப்பட்டன.

உலகின் மிகப்பெரிய பறவையான ஆண்டியன் கான்டோர் தென் அமெரிக்க மலை பகுதிகளில் அதிகம் காணப்படு கின்றன.

விஷம் கலந்த உணவை உண்ட இரண்டு பெண் ஆண்டியன் கான்டோர்கள் ஆபத்தான நிலையில் பொலிவியா மலைப்பகுதியில் மீட்கப்பட்டன.

உரிய சிகிச்சைக்கு பின் முழுமையாக குணமடைந்த அவை, கூண்டுகளில் வைத்து பால்கா (palca) மலைப்பகு திக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பறக்கவிடப்பட்டன.

அழிந்துவரும் இனங்களில் ஒன்றான ஆண்டியன் கான்டோர்கள், வேட்டையா டுபவர்களிடம் சிக்கி உயிரிழக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மெக்சிகோவில் முக்கிய சுற்றுலா தளமான தியோதிஹுகான் பிரமிட்டுக்களை பார்வையிட சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி



மெக்சிகோவின் முக்கிய சுற்றுலா தளங்களில் ஒன்றான தியோதிஹுகான் பிரமிட்டுக்களை பார்வையிட சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த பல மாதங்களாக மெக்சிக்கோவிலிருந்து 50 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தியோதிஹுகான் நகரத்தில் உள்ள பிரமிடை பார்க்க சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கவில்லை. இந்நிலையில் நேற்று முதல் அங்குள்ள பிரமி டுகள், தொல்பொருள் மண்டலம் உள் ளிட்டவற்றை சுற்றிப்பார்க்க சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெப்பநிலை பரிசோதனை, முகக் கவசம் கட்டாயமாக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 5 வருடங்களாகத் தவித்த செம்மறி ரோமத்தின் எடை மட்டும் 35 கிலோ

ஆஸ்திரேலியாவில், 35 கிலோ அளவுக்கு உடல் முழுவதும் ரோமம் வளர்ந்து, பார்வை மறைக்கப்பட்ட நிலையில் வனத்தில் சுற்றித் திரிந்த செம்மறி ஆட்டை மீட்டு மறுவாழ்வு அளித்துள்ளனர் தன்னார்வலர்கள்.

ஆஸ்திரேலியா, விக்டோரியா மாநிலத்தில் மெல்போர்னுக்கு வடக்கே 60 கி.மீ தொலைவில் உள்ள லான்ஸ்ஃபீல்ட்டில் உள்ளது எட்கர்ஸ் மின் சரணாலயம். இந்த சரணாலயத்தில் பல வருடங்களாக ரோமம் வெட்டப்படாததால், உடல் முழுவதும் ரோமம் வளர்ந்து கண்கள் மறைக்கப்பட்ட நிலையில் பரிதாபமாக சுற்றித்திரிந்தது செம்மறியாடு ஒன்று. அதன் உடலிலிருந்த ரோமங்கள் மட்டும் சுமார் 35 கிலோ எடை இருந்தது. இது இளம் வயதுடைய கங்காரு ஒன்றின் எடையில் பாதி என்பது குறிப்பிடத்தக்கது.

உடலில் வளர்ந்திருந்த ரோமத்தை சுமக்க முடியாமல், சிரமத்துடன் வனத்தில் சுற்றித் திரிந்த போது, இந்த ஆண்டின் தொடக்கத்தில் சிலர் பார்த்து எட்கர்ஸ் தொண்டு நிறுவனத்துக்குத் தகவல் அளித்தனர். பாரக் என்று பெயர் சூட்டப்பட்ட, இந்த செம்மறி ஆட்டை எட்கர்ஸ் மின் வனவிலங்கு அறக்கட்டளையைச் சேர்ந்த தன்னார்வலர்கள் தேடத் தொடங்கினர். ஒரு வார கால தேடுதலுக்குப் பிறகு, பாறை ஒன்றின் மீது கண்கள் மறைக்கப்பட்ட நிலையில், அடுத்த அடியை எங்கு வைப்பது என்று



தெரியாமல் தவித்துக்கொண்டிருந்த போது பாரக் செம்மறி ஆட்டைக் கண்டுபிடித்தனர். இதையடுத்து, அடுத்த சில நிமிடங்களில் செம்மறி ஆட்டின் உடலில் வளர்ந்திருந்த 35.4 கிலோ கிராம் எடையுள்ள ரோமத்தை வெட்டி மறுவாழ்வு அளித்தனர்.

ரோமம் வெட்டப்பட்டதையடுத்து தொண்டு நிறுவனத்தின் மறுவாழ்வு மையத்தில் மகிழ்ச்சியுடன் சுற்றித் திரிந்து வருகிறது பாரக். இது குறித்து எட்கர்ஸ் மினின் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த கைல் பெஹ்ரெண்ட், வனத்தில் செம்மறி ஆட்டைக் கண்டுபிடித்த போது அதன் நிலை மிக மோசமாக இருந்தது. முகம் முழுவதும் கம்பளி ரோமம் வளர்ந்து பார்வை முழுவதையும் மறைத்திருந்தது. இந்த வகை செம்மறி ஆடுகளுக்கு ஒவ்வொரு வருடமும் ரோமத்தை வெட்டி எடுக்க வேண்டும். இல்லையென்றால் இப்படிப்பட்ட நிலை தான் ஆகும். 05 ஆண்டுகளாக இவ்வளவு எடையை இந்த ஆடு எப்படி சுமந்துகொண்டு வாழ்ந்தது என்பதே வியப்பாக இருக்கிறது. ஆடுகள் உண்மையிலேயே எந்த அளவுக்குத் துணிச்சலான விலங்கு என்பதற்கு இது மிகச்சிறந்த உதாரணம் என்று ஆச்சரியத்துடன் தெரிவித்துள்ளார்.

# 2016 சிங்கப்பூரில் பணிப்பெண்ணுக்கு நடந்த கொடுமை கொலை வழக்கில் ஆயுள்கால சிறை விதிக்கப்படலாம்



தனது மூன்று வயது மகனை நன்றாக வளர்க்க வேண்டும் என்ற கனவுடன், சிங்கப்பூருக்கு வந்த மியன்மார் பணிப்பெண் ஒருவர் இந்திய வம்சாவளி பெண்ணால் கொடுமையாக சித்ரவதை செய்யப்பட்டு, 2016 ம் ஆண்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணையில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த சம்பவம் சிங்கப்பூர் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு, மியன்மார் நாட்டைச் சேர்ந்த பியாங் இங்கை டொன் என்பவர் தனது மூன்று வயது மகனை எப்படியாவது நல்ல முறையில் வளர்த்துவிட வேண்டும் எனும் நோக்கத்துடன் சிங்கப்பூருக்கு வீட்டுவேலை செய்வதற்காக வந்தார். மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த பியாங் இங்கை, இந்திய வம்சாவளி பெண்ணான காயத்ரி என்பவர் வீட்டில் வேலைக்கு சேர்ந்தார். அவருக்கு, கைபேசி பயன்படுத்தக்கூடாது, ஒரு நாள் கூட தவறாமல் வேலைக்கு வரவேண்டும், சுத்தமாக இருக்கவேண்டும் என்று பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அந்த நிபந்தனைகளை ஏற்றுப் பணிக்குச் சேர்ந்தார் பியாங் இங்கை.

பியாங் இங்கை எப்படி வேலை செய்தாலும் அந்த வேலையில் காயத்ரிக்கு திருப்தி ஏற்படவில்லை. வேலை சுத்தமாக இல்லை, மெதுவாக செய்கிறாய் என்று தொடர்ந்து கடுமையாகத் திட்டியுள்ளார் காயத்ரி. பிறகு மோசமாக அடித்துள்ளார். பணிப்பெண்ணைக் கவனிப்பதற்கென்றே கண்காணிப்பு கமராக்களைப் பொருத்தியுள்ளார். போதிய உணவு கொடுக்கவில்லை. தண்ணீரில் தோய்க்கப்பட்ட ரொட்டி, குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்ட பழைய சோறைக் கூட குறைவான அளவே கொடுத்துள்ளார். பசி கொடுமையால் தவித்த பியாங் இங்கை, தன் மகனைத் தவிக்கவிட்டு இறந்துவிடக் கூடாது என்பதற்காக, குப்பை தொட்டியில் போடுவதற்கு வைத்திருந்த உணவைக் கூட சாப்பிட முயற்சி செய்துள்ளார். ஆனால், அதைக் கூட காயத்ரி தடுத்துள்ளார். 5 மணி நேரத்துக்கு மேல் தூங்கக் கூடாது, கழிவறைக்குச் சென்றால் கூட கதவை தாழிடக் கூடாது. மீறினால் அடி, உதை என்று கொடுமைகளை அனுபவித்துள்ளார் பியாங் இங்கை. கன்னத்தில் அறைவது, முகத்தில் குத்துவது, உதைப்பது, தள்ளி விடுவது, துன்புறுத்தல் என்று வாழ்க்கையில் அனுபவிக்கக் கூடாத கொடுமைகளை அனுபவித்துள்ளார் பியாங் இங்கை.

2016 ஆம் ஆண்டு துணிகளைத் தேய்த்துக்கொண்டிருந்த போது, இஸ்திரி பெட்டியாலேயே கை, நெற்றி மீது சூடு வைத்துள்ளார் காயத்ரி. காயத்ரியின் கொடுமையால் 14 மாத காலத்தில் 15 கிலோவுக்கும் மேல் எடை குறைந்து போனார் பியாங் இங்கை டொன்.

இந்த நிலையில், கடந்த 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம், 25 ம் திகதியன்று, பியாங் இங்கையின் கைகளை ஜன்னலில் கட்டிவைத்து கொடுமைப் படுத்தியுள்ளார் காயத்ரி. ஈரத்துணியுடன் அப்படியே நிற்கவைத்து வயிற்றிலேயே எட்டி உதைத்துள்ளார். அந்த இரவு முழுவதும் வலி மற்றும் வேதனையுடன் படுத்த பியாங் இங்கை டொன், அடுத்த நாள் காலை, வழக்கம் போல காயத்ரி எட்டி உதைத்து எழுப்பிய போது கண்விழிக்கவே இல்லை. மருத்துவர்கள் வந்து பரிசோதித்த போது பியாங் இங் மரணமடைந்தது தெரியவந்தது.

பிரேதப் பரிசோதனையின் போது பியாங் இங்கையின் உடலில் 47 காயங்கள் இருந்ததற்கான தடயங்கள் கிடைத்தன. மேலும், அவர் இறந்த போது 24 கிலோ எடை மட்டுமே இருந்துள்ளார். இதையடுத்து, பொலிஸார் விசாரித்து காயத்ரி, அவரது தாயார் மற்றும் கணவரைக் கைது செய்தனர்.

தன் குழந்தையைக் காப்பாற்றி அவனது எதிர்காலத்துக்காக சிங்கப்பூர் வந்த பியாங் இங்கை கடைசியில் தன் மகனைப் பார்க்காமலேயே இறந்து போனார்.

இந்த வழக்கு விசாரணை தற்போது, சிங்கப்பூர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. பியாங் இங்கை வேவு பார்ப்பதற்காக காயத்ரி வீட்டில் பொருத்திய கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகள் அவருக்கு எதிராகத் திரும்பியுள்ளன. பணிப்பெண் பியாங் இங்கை கொடுமைப்படுத்தப்பட்ட காட்சிகளைப் பார்த்த நீதிபதிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். அந்த கொடுமைக் காட்சி உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதில் கொடுமை என்னவென்றால் காயத்ரியின் கணவர் காவல்துறையில் பணிபுரிந்தவராவார்.

நீதிமன்ற விசாரணையில், காயத்ரியின் வழக்கறிஞர், தாய்மை அடைந்திருந்தமையால் தான் காயத்ரி கடுமையான மன அழுத்தத்துக்கு ஆளாகியிருந்தார். 'ஓசிடி' எனப்படும் மனநலப் பிரச்சினையால் தான் அப்படி கொடுமையாக நடந்துகொண்டார் என்று வாதிட்டுள்ளார். ஆனால், அந்த வாதத்தை நீதிபதிகள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். சிங்கப்பூர் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்த வழக்கு விசாரணை முடிவில், காயத்ரி, அவரது தாயார் மற்றும் கணவருக்கு ஆயுள்கால சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

# மியன்மார் ராணுவ ஆட்சிக்கு எதிராக ட்ரக் ஓட்டுநர்கள் போராட்டம்..!

மியன்மாரில் ராணுவ ஆட்சிக்கு எதிராக ட்ரக் ஓட்டுநர்கள் நடத்தும் போராட்டத்தால் இறக்குமதியாகும் சரக்குகளை கொண்டு செல்வது தடைபட்டுள்ளது.

ராணுவம் ஆட்சியை கைப்பற்றுவதற்கு முன்னர் மியன்மாரில் உள்ள முக்கிய நான்கு துறைமுகங்களில் தினமும் 800 கன்டெய்னர்கள் கையாளப்படும். இந்த எண்ணிக்கை இப்போது 100 ஆக குறைந்துள்ளது.

மியன்மார் கன்டெய்னர் டிரக் சங்கத்தில் 4,000 ஓட்டுநர்கள் உள்ளனர். இவர்களில் 90 பேர் வேலை நிறுத்தம் செய்து ராணுவ அரசுக்கு தங்களது எதிர்ப்பை காட்டி வருகின்றனர்.

ஏற்கனவே கொரோனா ஊரடங்கு காரணமாக சர்வதேச அளவில் கன்டெய்னர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மியன்மார் ட்ரக் ஓட்டுநர்களின் போராட்டத்தால் அது அதிகரித்துள்ளது. இதன் காரணமாக 40 அடி கன்டெய்னர்களின் வாடகை சராசரியாக 50 சதவிகிதம் அதிகரித்துள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ரஞ்சனை சிறைக்குள் கொலை செய்யச் சதி; நாடாளுமன்றில் சஜித் காட்டத்துடன் கருத்து



அங்குனுகொலபலச சிறைக்குள் ரஞ்சன் ராமநாயக்கவை சூட்சமமாக கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், எனவே ரஞ்சன் ராமநாயக்கவிற்கு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் அதற்கு அரசாங்கமும், சபாநாயகரும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் தெரிவித்தார்.

இந்நிலையில் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளித்த அமைச்சர் ரொஹான் ரத்வத்தே, ரஞ்சன் ராமநாயக்கவின் உயிருக்கு எந்த வித அச்சுறுத்தலும் ஏற்படாது அவரை பாதுகாக்க வேண்டியது தனது பொறுப்பு எனவும், இப்போதே அவரை தனி சிறைக்கூடத்திற்கு மாற்றுவதாகவும் வாக்குறுதியளித்தார்.

நாடாளுமன்றத்தில், நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாக கேள்வி எழுப்பினர். ரஞ்சன் ராமநாயக்கவிற்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளதாகவும், அவரை நாடாளுமன்றத்திற்கு அனுமதிக்க வேண்டும் என்ற காரணிகளை சபையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

ரஞ்சன் ராமநாயக்கவை பார்வையிட சென்ற வேளையில் அவர் என்னிடம் பல காரணிகளைக் கூறினார். அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அவர் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்களுக்கு எதிராகப் பேசினார். அவ்வாறு பேசியவருக்கு இன்று இலங்கையிலுள்ள மோசமான கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் சிறைப்படுத்தப்பட்டுள்ள அங்குனுகொலபலச சிறையில் இருக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. எனவே, உடனடியாக நடைமுறைக்கு வரும் விதத்தில் ரஞ்சன் ராமநாயக்கவை வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இதன்போது ஆளும் கட்சியினர் சஜித் பிரேமதாஸவின் உரையைதடுத்த வேளையில் மீண்டும் மீண்டும் சபையில் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் -

ரஞ்சன் ராமநாயக்க இன்றும் நாடாளுமன்ற உறுப்பினர், அவரை நாடாளுமன்றத்திற்கு அனுமதிக்க வேண்டி நாம் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கிறோம். பிரேமலால் ஜெயசேகரவை நாடாளுமன்றத்துக்கு அனுமதிக்க முடியும் என்றால் ஏன் ரஞ்சன் ராமநாயக்கவை அனுமதிக்க முடியாது. ரஞ்சன் ராமநாயக்கவை மூன்று மாதங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுமதிக்காது அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையை பறிக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது. எனவே, ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்றத்திற்கு அனுமதிக்க வேண்டும். சபாநாயகர் இந்த கேள்விக்கு பதில் தெரிவிக்காது நாற்காலியை விட்டு தப்பி ஓடிவிட்டார் என்றார்.

இதன்போது சபையில் கருத்து தெரிவித்த சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறுகையில் -

சபாநாயகர் சபையை விட்டு தப்பி ஓடவில்லை, இலங்கை - பாகிஸ்தான் நாடாளுமன்ற நட்புறவு கூட்டத்திற்கு தலைமை தாங்கவே சபாநாயகர் சென்றுள்ளார். எனவே உண்மையான காரணிகள் எதுவும் தெரியாது சபையில் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம் என எதிர்க்கட்சி தலைவரை கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் -

சபாநாயகர் எமது நீண்டகால கேள்விக்கு பதில் தெரிவிக்காது தப்பி ஓடுகின்றார் என்பதையே கூறினேன். ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்றத்திற்கு அழைத்து வருவீர்களா மாட்டீர்களா? இந்த கேள்விக்கு இப்போதே பதில் தெரிவிக்க வேண்டும் என தொடர்ச்சியாக சபையில் கேள்வி எழுப்பினார்.

இதன்போது சபையை வழிநடத்திக் கொண்டிருந்த பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய -

இது குறித்து சபாநாயகருக்கு தெரிவிக்கின்றேன். ஆனால் நீங்கள் இவ்வாறு சபை நடவடிக்கைகளை நாசமாக்க வேண்டாம். பொறுப்புள்ள எதிர்க்கட்சி தலைவர் என்ற ரீதியில் செயற்படுங்கள். - என்றார்.

மீண்டும் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் -

நான் பொறுப்புடன் செயற்படுகிறேன், ஆனால் நீங்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்படுங்கள் என்றார்.

இதன்போது அடுத்த உரைக்கு தயாராக இருந்த அமைச்சர் பந்துல குணவர்தன எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்து இவர் எங்களை மிரட்டுகின்றார் என்றார்.

மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி தலைவர் சஜித்:- ரஞ்சன் ராமநாயக்கவை சபைக்கு அழைத்து வருவீர்களா? மாட்டீர்களா? என தொடர்ச்சியாக கேள்வி எழுப்பினார்.

பிரதி சபாநாயகர், அது குறித்து சபாநாயகர் தீர்மானம் எடுப்பார் என்றார். இதனை அடுத்து உரையாற்ற ஆரம்பித்த அமைச்சர் பந்துல -

இலங்கை அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சி தலைவர் ஒருவர் இவ்வாறு மோசமாக நடந்துகொண்டதில்லை எனக் கூறி அவரது உரையை நடத்த ஆரம்பித்தார். இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் தொடர்ச்சியாக கூச்சலிட்டு சபை அமர்வுகளை குழப்பினர். ரஞ்சன் ராமநாயக்க எம்.பியின் மீது முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளை கண்டிப்பதாகக் கோஷமிட்டு சபையில் பாடல்களும் பாடினர்.

இதன்போது மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி தலைவர்:- ரஞ்சன் ராமநாயக்கவிற்கு நாளைய தினம் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குகொள்ள அனுமதி வழங்கப்படுமா? அல்லது மறுக்கப்படுமா? இதற்கு தெளிவான பதிலை கூறுங்கள் என்றார்.

இதன்போது மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய நளின் பண்டார எம்.பி:- ரஞ்சன் ராமநாயக்க இன்றும் நாடாளுமன்ற உறுப்பினர், ஆனால் சபாநாயகரும், அரசாங்கமும் ரஞ்சன் ராமநாயக்கவை ஒளித்து வைத்துள்ளனர். இது தவறான விடயமாகும். ரஞ்சன் ராமநாயக்கவை கண்டு ஏன் அஞ்சுகின்றீர்கள். ரஞ்சன் ராமநாயக்கவை அங்குனுகொலபலச சிறைக்குள் சூட்சமமாக கொலை செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. எதிர்க்கட்சி தலைவர் நேற்று அங்குனுகொலபலச சிறைக்கு சென்ற வேளையில் அவருக்கு கிடைத்த தகவலை கொண்டே இன்று நாம் இந்த கேள்வியை எழுப்பிக்கொண்டுள்ளார். எனவே அரசாங்கம் இந்த விடயத்தை திட்டமிட்டு கையாள்வதாக தெரிகின்றது என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய அமைச்சர் ரொஹான் ரத்வத்தே,

ரஞ்சன் ராமநாயக்கவின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாக நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் அவர் மேலும் பத்து கைதிகளுடன் தொலைக்காட்சி வசதிகளுடனும் உள்ளார்.ஆனால் இப்போது நீங்கள் முன்வைக்கும் கோரிக்கைக்கு அமைய அவரை தனிச் சிறையில் அடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பத்து நிமிடங்களுக்கு முன்னர் இதனை அறிவித்தேன். எனவே அவருக்கு எந்தவொரு உயிர் அச்சுறுத்தலும் இல்லை என்றார்.

மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி தலைவர்,

சபையை குழப்ப எமக்கு எந்த நோக்கமும் இல்லை, ஆனால் மூன்று வாரத்தில் இந்த கேள்விக்கு பதில் தெரிவிப்பதாக சபாநாயகர் எமக்கு வாக்குறுதி வழங்கினார். ஆனால் இன்னமும் அதற்கான பதில் கிடைக்கவில்லை. அதேபோல் ரஞ்சன் ராமநாயக்கவே தனக்கு அச்சுறுத்தல் உள்ளதாக என்னிடம் தெரிவித்தார். எனவே அவருக்கு ஏதேனும் அசம்பாவிதம் இடம்பெற்றால் அதற்கு அரசாங்கமும், சபாநாயகரும் பொறுப்புக்கூற வேண்டும். உடனடியாக அவரை வெலிக்கடை சிறைக்கு மாற்றுங்கள் என்றார்.

மீண்டும் பதில் கூறிய அமைச்சர் ரொஹான் ரத்வத்தே,

வெலிக்கடை சிறையே பாதுகாப்பற்ற சிறைச்சாலை, ஆனால் அங்குனுகொலபலச சிறை இலங்கையில் உள்ள சிறைகளில் மிகவும் பாதுகாப்பான சிறைச்சாலையாகும். அதுமட்டுமல்ல ரஞ்சன் ராமநாயக்கவின் உயிருக்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படாது. அவருக்கான பொறுப்பை நானே ஏற்றுக்கொள்கிறேன் என்றார்.

மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய நாளின் பண்டார எம்.பி,

சிறைச்சாலை பாதுகாப்பற்றது என்பதை அமைச்சரே ஏற்றுக்கொள்கின்றார், எனவே ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்ற நாள்களில் நாடாளுமன்றத்திற்கு அனுமதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இந்நிலையில் நேற்று சபையில் தொடர்ச்சியாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி அரசாங்கத்தை மோசமாக விமர்சித்தனர்.

# எம்.பிக்களின் கல்வித்தகைமையை சபையில் வெளிப்படுத்துக!

## ஹரின் பெர்னாண்டோ



நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கல்வி தகைமையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும், சபாநாயகர் சகலரதும் கல்வித்தகைமையை சபைக்கு அறிவிக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ சபையில் தெரிவித்தார். அவரது கல்வி தகைமையை இன்றைய தினம் சபையில் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை, ஈஸ்டர் தாக்குதல் குறித்த அறிக்கை சபைப்படுத்தப்படுவதன் தாமதம் குறித்து ஆளும்,எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய ஹரின் பெர்னாண்டோ எம்.பி. -

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையை ஆராய நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற குழு நம்பிக்கையில்லாத ஒன்றாகவும், சாதாரண தரத்தில் சித்தியடையாத நபர்கள் இந்த குழுவில் உள்ளனர் எனவும் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த நாடாளுமன்றத்தில் உள்ள சகலரதும் கல்வி தகைமை என்ன என்பதை சபாநாயகர் இந்த சபைக்கு அறிவிக்க வேண்டும். எனது கல்வித் தகைமை என்ன என்பதை ) சபையில் தெரிவிக்கின்றேன்.

அதேபோல் ஆளும் கட்சியின் உறுப்பினர்களின்கல்வித்தகைமை என்ன என்பதை சபைக்கு தெரிவியுங்கள். அப்போது இந்த சபையில் சாதாரணதர தகுதி இல்லாதவர்கள் யார் என்பதை மக்கள் அறிந்து கொள்வார்கள். - என்றார்.

# வீட்டுக்கு வரும் சகலரிடமும் அ.அட்டை பெற்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!

## மக்களிடம் பொலிஸார் வேண்டுகோள்

பியகம பொலிஸ் பிரிவில் கொட்டுல்ல பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரெனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட குழுவொன்று வீடொன்றில் நுழைந்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த செவ்வாய்க்கிழமை விசேட அதிரடிப்படையினரெனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட ஒரு குழுவினர் வீட்டின் சொத்துக்கள் தொடர்பில் சோதனை செய்வதற்காகவே தாம் வந்துள்ளனர் எனக் கூறியுள்ளனர்.

சிவில் ஆடையில் குறித்த வீட்டுக்குள் நுழைந்த சந்தேகநபர்கள், 58 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 4 கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பில் பியமக பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் போதைப்பொருள் பாவனையாளர்கள் என்பதும் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் பியகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசேட அதிரடிப்படையினர், குற்ற விசாரணை அல்லது வேறு விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் எனக் கூறிக்கொண்டு வீடுகளில் நுழைந்து கொள்ளையடிக்கும் குற்றச் செயல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இலங்கை பொலிஸில் சிவில் ஆடையில் சேவையில் ஈடுபடும் சில பிரிவுகள் உள்ளன. எவ்வாறிருப்பினும் இவ்வாறு சேவையில் ஈடுபடும்போது அவர்களது உத்தியோகபூர்வ அடையாள அட்டையை எடுத்துச் செல்வர்.

எனவே, அடையாள அட்டைகளைப் பெற்று உறுதிப்படுத்திக் கொள்வதற்கான உரிமை பொது மக்களுக்கு உண்டு.

எனவே எந்தப் பிரிவினர் எனக் கூறினாலும் அவர்களது உத்தியோகபூர்வ அடையாள அட்டையைப் பெற்று உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மக்களை ஏமாற்றுபவர்கள் தொடர்பில் இலங்கை பொலிஸ் தொடர்ந்தும் அவதானித்து வருகிறது. எனினும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# மத்திய வங்கி பிணைமுறி மோசடிகளினால் பொருளாதாரத்துக்கு ரூ.1,450 கோடி நட்டம்!

## அஜித் நிவாட் கப்ரால் வேதனை

மத்தியவங்கி பிணைமுறி ஊழல் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தில் 1,450 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தாம் கருதுவதாகவும், இந்த ஊழல் தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து பிரதான குற்றவாளியைக் கண்டறிய வேண்டும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் சபையில் தெரிவித்தார். மத்திய வங்கி பிணைமுறி ஊழல் தொடர்பான விசாரணைகள் பல இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளன என சந்தேகம் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில், மத்திய வங்கி பிணைமுறி ஊழல் தொடர்பாக ஆளும் கட்சி உறுப்பினர் சாந்த பண்டார கேள்வி எழுப்பியிருந்த நிலையில் அதற்குப் பதில் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

கடந்த 2015 ஆண்டு பெப்ரவரி தொடக்கம் 2016 மார்ச் வரையில் கையாளப்பட்டுள்ள பிணைமுறி கைம்மாறல்கள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையையும், மத்திய வங்கி விசாரணை குழுவின் அறிக்கையையும் பார்க்கையில் இந்தக் காலத்தில் பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைய 2015 பெப்ரவரி முதலாம்திகதி தொடக்கம் 2016 மார்ச் 31 ஆம் திகதி வரையிலான பிணைமுறி கைம்மாறல்கள் மூலமாக பேர்பச்சுவல் நிறுவனம் பெற்றுக்கொண்ட இலாபமானது 8 லட்சத்து 52 ஆயிரத்து 900 கோடி ரூபாவாகும்.

இது மறுபக்கம் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களுக்கு ஏற்பட்ட நட்டமாகக் கருதப்படுகின்றது. அதேபோல் நான்காம் கணக்காய்வு அறிக்கைக்கு அமைய இந்த பிணைமுறி மாற்றங்கள் மூலமாக அரசாங்கத்திற்கு 660 கோடி ரூபாவில் இருந்து 960 கோடி ரூபா வரையில் இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு மேலாக ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதாரத்திற்கும் எவ்வளவு நட்டம் ஏற்பட்டது என சரியாக கணிக்க முடியாது போனாலும் கடந்த ஒன்பது ஆண்டுகள் நான் மத்திய வங்கி ஆளுநராக இருக்கின்ற காரணத்தால் எனது கணிப்பின் பிரகாரம் குறித்த செயற்பாடுகள் காரணமாக வட்டிவீதம் அதிகரிக்கப்பட்டால் மாத்திரம் 14 ஆயிரத்து 500 கோடிரூபா நட்டம் ஏற்பட்டிருக்கும் என கணிக்க முடியும். 2015 ஆம் ஆண்டு பெப்ரவரியில் அர்ஜுன மஹேந்திரன் மூலமாக பிணை முறி விதிமுறை மாற்றப்பட்ட நிலையில் 2017 ஜூலை மாதம் வரையில் இந்த நிலைமை காணப்பட்டது. அதன் பின்னர் வழமையான முறைமைக்கு வந்துள்ளது. எனவே இந்தக் காலத்தில் மிகப்பெரிய நட்டத்தை நாடு சந்தித்துள்ளது.

எவ்வாறு இருப்பினும் இந்த விடயம் தொடர்பாக முன்னெடுக்கும் விசாரணைகள் இன்னமும் முழுமை பெறவில்லை, தொடர்ந்தும் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றே நான் கருதுகிறேன். ஏனெனில் இந்த விசாரணைகள் ஒரு சில இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிய வருகின்றது.

குறிப்பாக ஆயிரம் கோடி உடனடி பணம் எவ்வாறு கைம்மாற்றப்பட்டது, மத்திய வங்கிக்கு யார் இந்த அனுமதியை கொடுத்தது என்பது தொடர்பாக எந்த அறிக்கையும் வெளிவரவில்லை. எனவே இது குறித்து மேலும் ஆராய வேண்டும். அதேபோல் பிரதான குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டறிய வேண்டும். ஆனால் இன்னமும் அது தொடர்பாக எந்த விசாரணையும் முன்னெடுக்கப்படவில்லை. - என்றார்.

# திருமலை எண்ணெய் குதம் இலங்கையின் வசமாகுமாம்!

## உதய கம்மன்பில நம்பிக்கை

திருகோணமலை எண்ணெய் குதங்களில் பெரும்பாலானவை இலங்கையின் நிர்வாகத்தின் கீழும் ஏனையவை இந்திய நிறுவனமொன்றின் நிர்வாகத்தின் கீழும் இயங்கும் வகையில் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன எனக் கூறினேனே தவிர, இந்தியாவிடம் இருந்து எண்ணெய் குதங்களை இலங்கை அபகரிக்கும் என்ற அர்த்தத்தில் கூறவில்லை என அமைச்சர் உதய கம்மன்பில சபையில் தெளிவுபடுத்தினார். எவ்வாறு இருப்பினும் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இலங்கை வசமாகும் என்பது உண்மை எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல வினாக்கான விடை நேரத்தில், திருகோணமலை எண்ணெய் குதங்களை இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொள்வதாக அமைச்சர் உதய கம்மன்பில கூறியிருந்த நிலையில் அதனை அரசாங்கமே நிராகரித்துள்ளது, உங்களை பைத்தியக்காரன் என பிரதமர் கூறியுள்ளார். இது தொடர்பான உண்மைத்தன்மை என்ன என்பதை தெரிந்துகொள்ள முடியுமா என எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷா விதானகே கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் தெரிவித்த அமைச்சர் கம்மன்பில மேலும் கூறுகையில் -

மனநல வைத்தியரின் கடமையை பிரதமர் செய்ய மாட்டார் என நான் நம்புகிறேன், அவ்வாறு மனநல வைத்தியராக பிரதமர் இருப்பார் என்றால் முதலில் எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பார்த்தே அவ்வாறு கூறியிருக்க வேண்டும். எவ்வாறு இருப்பினும் 2003 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில் எமது எண்ணெய்க்குதங்களை இந்தியாவிற்கு வழங்கினர்.

இப்போது நாம் இந்தியாவுடன் பேச்சு நடத்தி, இந்த எண்ணெய் குதங்களில் பெரும்பாலானவை இலங்கையின் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உரிமத்தின் கீழ் நிர்வகிக்கவும், ஏனையவற்றை இந்தியாவின் நிறுவனம் ஒன்றின் மூலமாக நிர்வகிக்கும் பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம்.

இதுவும் கிழக்கு முனையம் போன்ற விடயமா என சிலர் கேள்வி எழுப்புகின்றனர். ஆனால், கிழக்கு முனையத்தில் முழுமையாக எமது நிர்வாகத்தின் கீழிருந்த உரிமத்தில் 49 வீதத்தை இந்தியாவிற்கு கொடுப்பதாக இருந்தது. திருகோணமலை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அவ்வாறு அல்ல, நூறு வீதம் இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழுள்ள குதங்களில் பெரும்பாலானவற்றை எமது கட்டுப்பாட்டின் கீழும் எடுத்துக்கொள்வதே இங்கு இடம்பெறுகின்றது.

வெகு விரைவில் இந்தியாவின் எண்ணெய் குதங்கள் எம்வசமாகும் எனவும் பெரும்பாலான பகுதி எமக்கு ஏனையவை இந்தியாவிற்கும் என்ற அடிப்படையில் இந்த வேலைத்திட்டம் அமையும் எனவும் நான் கூறியிருந்தேன். எனினும் ஓர் ஊடகம் அவர்களின் அவசர செய்தியில் தவறான மொழிபெயர்ப்புடன் செய்தியைப் பிரசுரித்துள்ளனர்.

திருகோணமலை எண்ணெய் குதங்களை இலங்கை கைப்பற்று என்ற அர்த்தத்தில் அவர்கள் செய்தியை பிரசுரித்தவுடன், அதே அர்த்தத்தில் இந்தியாவின் இரண்டு ஊடகங்களும் செய்தியை பிரசுரித்துள்ளன. அவர்களின் தலைப்பு செய்தியாக இவற்றை பிரசுரித்துள்ளமையை அடுத்தே இந்திய உயர் ஸ்தானிகர் ஆணையம் அதற்கான மறுப்பு செய்தியை வெளியிட்டிருந்தது.

ஒன்றிணைந்து இதனை அபிவிருத்தி செய்வதாக சரியான செய்தியை தூதரகம் வெளியிட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இலங்கை வசமாகும் என்பது உண்மை, ஆனால் அது அபகரித்தல் என்ற வார்த்தை அல்ல, மாறாக பெரும்பாலான எண்ணெய்குதங்களைநாம்பெற்றுக்கொள்வோம் என்பது உண்மை எனவும். -அவர் கூறினார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். அச்சுறுத்தல்கள் தொடர்பில் அவதானம் - அரசு

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் அச்சுறுத்தல் தொடர்பாகப் பல சந்தர்ப்பங்களில் தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன. அதற்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அரசாங்கம் தெரிவித்தது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

கேள்வி:- ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் இலங்கை தொடர்பில் அவதானித்து வருவதாக கூறப்படுகின்றது. அவ்வாறெனில் மீண்டும் இலங்கைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதா?

பதில்:- இதுபோன்ற அறிவித்தல்கள் அடிக்கடி கிடைத்துள்ளன. அவை தொடர்பில் நீதித்துறை சார்ந்த கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்படும். எனவே உரிய நடவடிக்கைகள் உரிய நேரத்தில் எடுக்கப்படும். சகல விடயங்களையும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் பகிரங்கமாகக் கூற முடியாது. இவை தொடர்பில் பல வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. எமக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் தகவல்கள் தொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். - என்றார்.


கல்யாணமாலை



வட சர்வதேச திருமண சேவை



**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1985.04.28
மதம் - இந்து V
நட்சத்திரம் - திருவாதிரை
செவ் - ----
பாவம் - 41 1/4
கல்வி - A/L
தொழில் - சுய தொழில் (தோட்டம்)
எதிர்பார்ப்பு - சாதாரண பெண்.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1984.06.22
மதம் - இந்து V
நட்சத்திரம் - உத்திரட்டாதி
செவ் - ------
பாவம் - 40
கல்வி - A/L
தொழில் - --
எதிர்பார்ப்பு - வெளிநாடு தேவை.

யாழ் காலைக்கதிரில் காலை, மாலைப் பதிப்பிலும் முகநூலின் ஊடாகவும் மணமக்கள் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.
அலுவலக நேரம் - எல்லா நாள்களும் காலை 8.30 தொடக்கம் 5.30 வரை.
பதிவுக் கட்டணம் 1000 + 300
Facebook - Kalyanamalaivada.com

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
076 885 6925
077 857 8528


# 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸாருக்கு கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது!

கொவிட் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இது வரையில் 15 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

கடந்த செவ்வாய்க்கிழமை மாத்திரம் 2 ஆயிரத்து 254 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு - நாரஹேன்பிட்டியவிலுள்ள பொலிஸ் வைத்தியசாலை பணியாளர்களுக்கும், குண்டசாலையிலுள்ள பொலிஸ் வைத்தியசாலை பணியாளர்களுக்கும் ஆரம்பகட்டமாக தடுப்பூசி வழங்கப்பட்டது. அதற்கமைய இது வரையில் 15 ஆயிரத்து 331 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் வைத்தியசாலைகளிலுள்ள பணியாளர்களுக்கு ஆரம்பக்கட்டமாக தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் நிறைவடைந்தவுடன், நேரடியாக பொலிஸ் சேவையில் ஈடுபடுபவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன. - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.02.2021இல் வெளியிடப்பெற்றது.